## செய்தி வெளியீடு

பெண்கள் கல்வி அறிவு பெற்று, அதன் மூலம் வேலை வாய்ப்பை எய்தி, பொருளாதார முன்னேற்றம் அடையும் வகையில், மகளிர் முன்னேற்றத்திற்கான பல சிறப்பான திட்டங்களை தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், ஒவ்வொரு ஆண்டும் சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில், இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில் ஒருவரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சர்வதேச மகளிர் தினத்தன்று ‘‘அவ்வையார் விருது” எனும் உயரிய விருது வழங்கவும், இந்த விருது பெறுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், **8** கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் **2012**–ஆம் ஆண்டு அறிவித்திருந்தார்கள். அதன்படி கடந்த மூன்று ஆண்டுகளாக “அவ்வையார் விருது” மகளிர் தினத்தையொட்டி வழங்கப்பட்டு வருகிறது.

**2015**–ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருது வழங்கிட, டி.டி. ரங்கநாதன் மருத்துவ ஆராய்ச்சி நிறுவன டி.டி.கே. மருத்துவமனையின் கௌரவ செயலாளராகவும், சுவாமி தயானந்தா கல்வி மையத்தின் கௌரவ செயலாளராகவும் பணிபுரிந்து வரும் முனைவர் சாந்தி ரங்கநாதன் அவர்களை தெரிந்தெடுத்து, அவர்களுக்கு அவ்வையார் விருதுடன் ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலை, **8** கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடை வழங்கிட தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 7.3.2015